**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருப்பூர் மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான ஊராட்சி செயலர் திரு.கே.முருகன் என்பவரின் மகன் திரு.மு.விஷ்ணு பிரகாஷ், இளநிலை உதவியாளர் நிலையிலான காசாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை**

**அரசாணை (3ப) எண்.25** — **நாள் 05.05.2022.**
**சுபகிருது, சித்திரை 22,**
**திருவள்ளுவர் ஆண்டு 2053.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வ) அவர்களின் நடவடிக்கைகள் கடித ந.க.எண்.6165/ 2019/வி2, நாள்: 29.01.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.39669/2021/டி2, நாள்: 03.01.2022.

*****

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில், பெரியவாளவாடி ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து 11.05.2019 அன்று காலமான திரு.கே.முருகன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.மு.விஷ்ணு பிரகாஷ் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், திருப்பூர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளர் நிலையில் காசாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 02.02.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.மு.விஷ்ணு பிரகாஷ் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 09.10.2019

அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 17.01.2000 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 19 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என தெரிவித்து, அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரை உரிய அசல் ஆவணங்களுடனும், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படியும் அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், இளநிலை உதவியாளர் நிலையில் காசாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.மு.விஷ்ணு பிரகாஷ் என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் நிலையிலான காசாளர் பதவியில் 02.02.2021 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாரா எண்.5914/ட்டி1/2022, நாள்:30.03.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் மாவட்டம்.
திரு.மு.விஷ்ணு பிரகாஷ், இளநிலை உதவியாளர் / காசாளர்,
திருப்பூர் மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் மாவட்டம்)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திருப்பூர் மாவட்டம்.

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி.அனுப்பப்படுகிறது//**

பிரிவுஅலுவலர்.

மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி),
திருப்பூர்.

மே.கு.ந.க.எண்: 6165/2019/வி2-3 நாள்: 27.06.2022

"அரசாணை(3ப) எண்: 25 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ-5) துறை
நாள்: 05.05.2022 "

"சார்வு செய்யப்படுகிறது"

மாவட்ட ஆட்சியருக்காக,
திருப்பூர்.

பெறுநர்:
திரு. மு. விஷ்ணுபிரகாஷ்,
காசாளர்,
ஊராட்சி ஒன்றியம், உடுமலைப்பேட்டை.(உரிய வழியாக)

நகல்: ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், உடுமலைப்பேட்டை, திருப்பூர்
மாவட்டம். (சார்வு செய்து சார்வு நகல் மீள அனுப்பும் பொருட்டு)